செய்தி வெளியீடு எண் : 2203 நாள் : 02.11.2023

# செய்தி வெளியீடு

கல்வியே வளர்ச்சியின் முதுகெலும்பு. அனைவருக்கும் கல்வியை உறுதி செய்வதற்காக, குறிப்பாக சமூகத்தின் பின் தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்காக விடுதிகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடத்திற்கான வசதியை வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலை விடுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது-

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளின் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விடுதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தினை கருத்தில் கொண்டு விடுதிகளில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள சிறப்பு நிதி ஒதுக்கீடு அவ்வப்போது அரசால் வழங்கப்படுகிறது. அதன்படி 2023-24 ஆம் ஆண்டு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள ரூபாய் 20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்படி அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக 34 மாவட்டங்களில் 63 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் மற்றும் 66 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகள் என மொத்தம் 129 விடுதிகளுக்கு ரூபாய் 20.00 கோடி மதிப்பீட்டில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் விடுதிகளில் மின்சார பராமரிப்புப் பணிகள், விடுதி கட்டடங்களில் பழுது நீக்குதல், கதவு ஜன்னல்கள் சீரமைத்தல் போன்ற பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படும்.

மாவட்டங்களில் விடுதிகளில் பழுதுபார்ப்புப் பணிகள், பராமரிப்புப் பணிகளை ஆய்வு செய்து துரிதப்படுத்திடவும் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அரசு செயலாளர்
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in